# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

### மாதாந்த பயிற்சி வினாத்தாள்

| தரம் - 12 | கிறிஸ்தவ நாகரிகம் | யூலை – 2022 |
| --- | --- | --- |

1. குறுநில மன்னர்களான அர்க்கெலா மற்றும் ஏரோது அந்திப்பா போன்றோர் நாடு கடத்தப்பட்ட இடங்கள் முறையே.
   1. லியோன், பெரேயா  2. பெனராஸ், செசாரியா  3. வியன்னா, லியோன்
   4. திபேரியா, வியன்னா  5. லியோன் இதுமேயா

2. 1ம் ஏரோது அக்ரிப்பா மன்னால் தூயபேதுரு சிறைப்படுத்தப்பட்டமை பற்றி விபரிக்கும் திருவிவிலியப் பகுதி.
   1. யோவா. 5:1-20  2. தி.ப. 25ஆம் அதிகாரம்  3. மாற். 7:5-10
   4. பி.லி. 4ம் அதிகாரம்  5. தி.பா. 12ம் அதிகாரம்

3. கிரேக்க மொழி பேசும் யூதர்கள் தமது மதத்தின் தலைநகராக எதனைப்˙பேணி வந்தனர்.
   1. சமாரியா  2. கலிலேயா  3. பெத்தலகேம்
   4. ஜெருசலேம்  5. எரிக்கோ

4. புறவினத்தாருக்கு பணியாற்றுவதனை தனக்குக் கிடைத்த பெருமையாகக் கருதும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்
   1. யோவான்  2. பேதுரு  3. லூக்கா
   4. மாற்கு  5. பவுல்

5. திருத்தூதர்களுள் முதல் மறைசாட்சியான யாக்கோபுவின் மரணத்திற்கு காரணமான மன்னன்
   1. 3ஆம் ஏரோது அந்திப்பா  2. மகா ஏரோது  3. அர்க்கெலா
   4. 1ஆம் ஏரோது அக்ரிப்பா  5. ஏரோது பிலிப்பு

6. இயேசுவின் காலத்தில் யூதப் பெண்களுக்கு விலக்களிக்கப்பட்டிருந்த செபம்.
   1. அன்புறவுச் செபம்  2. மாலைச் செபம்  3. ஷேமா
   4. ஒன்று கூடல் செபம்  5. ஒன்றுகூடல் செபம்

7. கிரேக்க ஆட்சியில் தால்முட் என்ற சட்ட ஒழுங்கின்படி யூதர்கள் மத்தியில் பின்பற்றப்படடு வந்த விடயம்.
   1. பலி செலுத்துதல்  2. பலதாரக்கொள்கை  3. உடன்படிக்கை வாசித்தல்
   4. தொழுகைக்கூட வழிபாடு  5. சிலை வழிபாடு

8. தால்முட் முறைப்படி ஒரு யூத அடிமை எத்தனை செப்புக் காசுக்கு விற்கப்பட்டார்?
   1. 1 அல்லது 2 செப்புக்காசுகள்  2. 5 முதல் 7 செப்புக்காசுகள்
   3. 7 முதல் 10 செப்புக்காசுகள்  4. 12 செப்புக்காசுகள்
   5. 2 அல்லது 5 செப்புக்காசுகள்

9. எபிரேய மொழி பேசும் யூதர்கள் என அழைக்கப்பட்ட யூத சமூகப் பிரிவினர்.
   1. புறவினத்தார்  2. சிதறி வாழ்ந்த யூதர்கள்  3. பேரரசர்கள்
   4. பாலஸ்தீன யூதர்கள்  5. ஆளுநர்கள்

10. கி.மு 722 இல் இஸ்ரயேலரை நாடுகடத்திய அசீரிய மன்னன்
1. எத்கிளார் பலசார் 2. றெகபயாம் 3. 4ம் ஆமன் கோட்டபு
4. நெபுக்கத்னேசர் 5. எரோபோவாம்.

11. இயேசுவின் பாடுகளுடன் தொடர்புடைய போந்தியு பிலாத்து எந்தக் காலப்பகுதியில் ஆளுநராக இருந்தார்.
1. கி.பி 6-26 2. கி.பி 41இல் 3. கி.பி 100-120
4. கி.பி 64-66 5. கி.பி 26-36

12 யூதர்களின் எந்த சட்ட நூலில் வரிதண்டுதல் பாவமான தொழிலாகக் கருதப்பட்டது.
1. தால்முட் 2. மிஸ்னா 3. ஐந்நூல்
4. வல்கேற் 5. தார்கும்

13 கி.பி 6 முதல் கி.பி 26 வரை பலத்தீனாவில் உரோம அதிகாரிகளாக பதவி வகித்தவர்களுள் பொருத்தமற்றது.
1. ருபு 2. அம்பிலியு 3. ரைற்றஸ்
4. வலேரியு 5. சிராகு

14 யூதர்களின் நன்மதிப்பை பெற ஜெருசலேம் ஆலயத்தை புதுப்பித்து கட்டியெழுப்பிய குறுநில மன்னன்
1. பிலிப்பு 2. அர்க்கெலா 3. பெரிய ஏரோது
4. ஏரோது அந்திப்பா 5. 1ம் ஏரோது அக்கரிப்பா

15 பாலஸ்தீனாவின் முழுப் பகுதியிலும் உரோமையரின் ஆட்சி உறுதி பெற்றது.
1. கி.மு 97ற்கு முன் 2. கி.மு 37ற்கு பின் 3. கி.மு 63இல்
4. கி.மு 100ற்கு பின் 5. கி.பி 39இல்

16 உரோமையப் பேரரசின் முதல் இறுதிப் பேரரசர்களின் சரியான ஒழுங்கு.
1. தியோக்கிளேசியன் - யூலியஸ் சீசர் 2. யூலியஸ் சீசர் - திபேரியு சீசர்
3. திபேரியு சீசர் - கலிகுலா , குளேடியஸ் 4. யூலியஸ் சீசர் - தியோக்கிளேசியன்
5. தொமிசியன் - திராயன்

17 அந்நிய நாடுகளுடனோ, அந்நிய நாட்டு மக்களுடனோ, அவர்களின் கலை, கலாசார பண்பாடுகளுடனோ எவ்வித தொடர்பும் , உறவும் பழக்கமும் அற்றவர்களாகவும் எபிரேய மொழி பேசும் யூதர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் …………….. ஆவார்.
1. சமாரியர் 2. புறவினத்தினர் 3. பாலஸ்தீன யூதர்கள்
4. சிதறி வாழ்ந்த யூதர்கள் 5. உயர்குலத்தோர்

18 இயேசுவின் காலத்தில் உயர்குலத்தோர் என்பதில் முன்னிடம் வகித்தவர்கள்.
1. அரிமத்தியா யோசேப்பு 2. ஏரோதிய குடும்பம் 3. எரிக்கோ நகர சக்கேயு
4. லேவி குடும்பம் 5. அன்னா குடும்பம்

19. யூத சமூகத்தில் பெண்களின் ஆன்மீக செயலாகக் கருதப்பட்டது.
1. ஷேமா என்ற செபத்தை சொல்லுதல்
2. கூடாரத் திருவிழாவின் போது கூடாரத்தில் தங்கியிருத்தல்
3. கணவனுக்கு கீழ்ப்படிந்து நடத்தல்.
4. தோரா சட்ட நூலை வாசிப்பது
5. குழந்தைகளை சரியாக வளர்ப்பது.

20. யூதரின் பொருளற்ற சட்டத்தை இயேசு உடைத்தெறிந்து மனித மாண்பின் மேன்மையை நிலைநாட்டிய சம்பவங்கள் இரண்டு

A. சமாரியப் பெண்ணுடன் உரையாடினார்

B. திமிர்வாதக்காரனை குணமாக்கினார்.

C. இலாசரை உயிர்ப்பித்தார்.

D. சமாரியா வழியாக பயணம் செய்தார்.

E. சூம்பிய கையைக் குணமாக்கினார்.

1. ABC 2. BCD 3. AD 4. CE 5. CE

## பகுதி- 02

## பகுதி – I

01 I யூதர்களில் தாழ்த்தப்பட்ட நான்கு பகுதியினரைத் தருக

II குறுநில மன்னர் ஆர்க்கெலா பற்றி நான்கு விடயம் தருக

III யூத சமுதாயத்தில் வரி வசூலிப்பவர் நிலை பற்றி குறிப்பிடுக

IV சிதறி வாழ்ந்த யூதர்கள் பற்றி கலந்துரையாடுக

02 I படைவீரரின் பணிகள் நான்கு தருக.

II தீவிரவாதிகளின் பண்புகள் நான்கு தருக

III உரோமைய ஆளுநர்களின் பணிகளை குறிப்பிடுக.

IV யூதர்கள் மத்தியில் தலைமைக் குருக்கள் பெற்ற செல்வாக்கை விபரிக்குக.

## பகுதி- II

03 அ) யூத சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டோரைக் குறிப்பிட்டு பெண்கள் எவ்வாறு ஆண்களைவிட கீழ்நிலையில் கருதப்பட்டனர் என்பதை விளக்குக

ஆ) இன்று பின்தங்கிய மக்கள் மத்தியில் திருச்சபைத் தலைவர்களோடு இணைந்து ஆற்றக்கூடிய பணிபற்றி கலந்துரையாடுக

04 அ) பலஸ்தீன சமுகத்தில் யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையேயான உறவு நிலையையும் அவர்கள மட்டில் இயேசுவின் மனநிலையையும் விளக்குக

ஆ) இன்று பல்லின மக்களிடையே காணப்படும் முரண்பாடுகளை களைந்து ஒற்றுமையை வளர்க்க நீர் மேற்கொள்ளும் செயற்பாடுகளை எடுத்துரைக்க